www.nunnarivu.com

# நீதியின் நுண்ணறிவு

புலனாய்வு இதழ்

NEETHIYIN NUNNARIVU

மலர் : 6 | இதழ் : 6 | மார்ச் : 2026 | தமிழ் மாத இதழ் | விலை : ரூ.15/-

Volume : 6 | Issue : 6 | March : 2026 | Tamil Monthly Mgazine | Price : Rs. 15/-



## கலைஞரின் கனவு இல்லம் மின்வாரியம் மாமூல் வசூல், தட்டி கேட்பாரா...? முதல்வர் ஸ்டாலின்!!!




## ரூ.1 கோடி விபத்து காப்பீடு காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், இ.கா.ப., அவர்கள் வழங்கினார்.




## விருகம்பாக்கம் சார்பதிவாளர் அள்ளி குவிக்கும் பணக்கட்டுகள்...



## காவல் துறையில் உண்மை உழைப்புக்கான அங்கீகாரம் பின்தங்கும் டிஎஸ்பிகளின் பதவி உயர்வு?, மன உளைச்சலில் சீனியர்கள் காரணம் என்ன???


SS AQUA
TECHNOLOGIES
SWIMMING POOL, JACUZZI & STEAM,
FOUNTAINS, LANDSCAPING & IRRIGATION
The pool gives good vibes
+ 91 96264 34377
www.ssaquatechnologies.com


SODEX
Liquid Laundry Detergent
SODEX
Floor Cleaner
SODEX
Toilet Cleaner
Active Formula
5 in 1
SODEX
DISHWASH LIQUID
SODEX
Fabric Softener
SODEX
Clean & Care.
Manufactured & Marketed By:
ECOGUARD LABS
Plot # 14, Rojambal Nagar Kanna puram, Mugaglivakkam Chennai 600125
Contact: 95000 76229 / 95000 76411
பொருளோ தரம்
வீட்டிற்க்கோ சுகாதாரம்!!

www.nunnarivu.com

# நீதியின் நுண்ணறிவு

NEETHIYIN NUNNARIVU

புலனாய்வு இதழ்

ஆசிரியர் வெளியீட்டாளர்
**R.சிவக்குமார்**

இணை ஆசிரியர்கள்
**J.கணேசபாண்டி, A.விஜய், G.ஜெயபிரகாஷ்நாராயணன்**

துணை ஆசிரியர்கள்
**D.சிவராஜ், K.பாரதிராஜா, G.சுரேந்திரன், B.காந்திநாதன், S.ராஜ்நாராயணன்,**

கௌரவ ஆலோசகர்கள்
**A.கந்தசாமி. S.P.**
காவல்துறை கண்காணிப்பாளர்(ஓய்வு)
**சுபாஷ் சந்திரபோஸ்**
காவல் துண கண்காணிப்பாளர் (ஓய்வு)
**Dr.K.முருகேசன்.M.B.B.S., D.L.O.,**
**மா.செல்வராஜ்**
(முன்னாள் முதல்வர் - குருநானக் கல்லூரி)
(மாநில தகவல் ஆணையர்)
**சோம்புராஜன்**
கூடுதல்ஆணையர் தெழிலாளர்துறை (ஓய்வு)
**டாக்டர். மணிவண்ணன்.B.S.M.S.**

முதன்மை நிருபர்கள்
**M.சுப்பிரமணியன், R.சதீஷ்குமார், V.மாதவன்,**

நிருபர்கள்
**R.இன்பசேகரன், G.மோகன், S.சாம்எட்வின், C.சரவணன், S.சஞ்சய்குமார், A.மதிமாறன், J.ஜெஸ்டின்டேவிஸ், மு.ஐசக், P.சாலமன், P.கோகுல்நாதன், P.பிரம்மநாயகம்**

சட்ட ஆலோசகர்கள்
**R.வீரராகவன்.BSc., M.B.M., LL.B., K.M.S.செந்தில்குமார்.BSc., B.L., S.சரவணன்.M.Sc., B.L.,M.A.,**

வடிவமைப்பு : **மகாராஜா பிரிண்டர்ஸ்**

நிர்வாக அலுவலகம்:
எண்.14/88, வெங்கடேஸ்வரா நகர்,
3வது மெயின் ரோடு,
வேளச்சேரி, சென்னை - 42.

nunnarivuidhal@gmail.com
www.nunnarivu.com

Allrights reserved legal jurisdiction in chennai city court only. Nothing in **NEETHIYIN NUNNARIVU** is intended to defame any person. But expressed in good faith pursuit of truth and public good.



# பறவைகளிடமிருந்து நாம் சில பாடங்களை படிப்போம்

1. இரவு நேரம் ஒன்றும் சாப்பிடுவதில்லை.

2. இரவு நேரங்களில் ஊர் சுற்றுவதில்லை.

3. தன் பிள்ளைகளுக்கு தக்க சமயத்தில் வாழ்க்கைக்கான பயிற்சிகளை அளிக்கின்றன.

4. மூக்குமுட்ட உண்ணுவதில்லை. எவ்வளவு தானியங்களை இட்டு கொடுத்தாலும் தேவையானவற்றை மட்டும் கொத்திவிட்டு பறந்து செல்கின்றன. போகும் போது எதையும் எடுத்து போவதில்லை.

5. இருள் சூழும்போதே உறங்க துவங்குகின்றன. அதிகாலை ஆனந்தமாய் பாட்டு பாடி எழுகின்றன.

6. தனது ஆகாரத்தை அவை மாற்றுவதில்லை.

7. தனது உடலில் வலுவுள்ளவரை உழைக்கின்றன. இரவு அல்லாது மற்ற நேரங்களில் ஓய்வு எடுப்பதில்லை.

8. நோய் வந்தால் உண்ணுவதில்லை. சுகமான பின் உணவு எடுத்துக்கொள்கிறது.

9. தன் குழந்தைகளுக்கு பரிபூரணமான அன்பை கொடுத்து வளர்க்கின்றன.

10. கடுமையான உழைப்பாளிகளாயிருப்பதால், இதயம், கல்லீரல், நுரையீரல் நோய்களால் பாதிக்கப்படுவதில்லை.

11. இயற்கைக்கு எதிராக ஒருபோதும் செயலாற்றுவதில்லை. தனது அத்தியாவசிய தேவைக்கு மட்டும் இயற்கையிலிருந்து பெற்று கொள்கின்றன.

12. தனது கூடு மற்றும் சுற்று சூழல்களை அனுசரனையோடு பாதுகாக்கின்றன.

இதில் சில படிப்பினைகளையாவது நாம் பாடமாக எடுத்துக்கொண்டால் வாழ்வு சிறப்பது திண்ணம்.



**ஆசிரியர்**
**R.சிவக்குமார்**



# தஞ்சை மேயர் சட்டமன்ற தேர்தலில் வாகை சூடுவாரா?

**தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண். ராமநாதன் (Sun. Ramanathan) அவர்களின் வாழ்க்கை மற்றும் அரசியல் பயணம்**

**பிறப்பு மற்றும் ஆரம்பகால வாழ்க்கை**

**பிறப்பு:** இவர் தஞ்சாவூரில் பிறந்தார் (தற்போது சுமார் 49 வயது).

**கல்வி:** தனது கல்லூரி காலத்திலேயே அரசியலில் ஈடுபாடு கொண்டவர். 1993-ம் ஆண்டு ஒரு மாணவர் அணி செயல்பாட்டாளராக தனது அரசியல் பயணத்தைத் தொடங்கினார்.

**அரசியல் பயணம்:** (Political Career) சண். ராமநாதன் திமுகவின் அடிமட்டத் தொண்டராக இருந்து படிப்படியாக உயர்ந்தவர்.

**பதவிகள்:** இவர் தஞ்சாவூர் மத்திய மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளராக நீண்ட காலம் பணியாற்றியுள்ளார்.

**உள்ளாட்சி அனுபவம்:** மேயராவதற்கு முன்பே இரண்டு முறை நகராட்சி/மாநகராட்சி உறுப்பினராக (Councillor) இருந்துள்ளார். 2006-ல் முதல்முறையாக கவுன்சிலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**மேயர் பதவி:** 2022-ல் நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் 51-வது வார்டில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பின்னர், மார்ச் 4, 2022 அன்று தஞ்சாவூர் மாநகராட்சியின் முதலாவது திமுக மேயராக பொறுப்பேற்றார்.

**முக்கிய சிறப்பம்சங்கள்:** தலைமையுடன் நெருக்கம்: இவர் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் மற்றும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோருடன் நீண்டகால அரசியல் நெருக்கம் கொண்டவர். இளைஞரணியில் சிறப்பாகச் செயல்பட்டதற்காக இவருக்கு மேயர் வாய்ப்பு வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

**நிர்வாகம்:** 'தஞ்சை மாநகராட்சியை ஒரு முன்மாதிரி நகரமாக மாற்றுவதே எனது லட்சியம்' என்று கூறும் இவர், ஸ்மார்ட் சிட்டி திட்டங்கள் மற்றும் தூய்மைப் பணிகளில் அதிக கவனம் செலுத்தி வருகிறார்.

**எளிமை:** சமீபத்தில் ஆதரவற்ற முதியோர்களுடன் தீபாவளி கொண்டாடியது மற்றும் பாரம்பரிய கலைஞர்களுடன் இணைந்து பறை இசைத்தது போன்ற நிகழ்வுகள் மூலம் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றார்.






வரவிருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, (02.03.2026) அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில், நம் உயிர்நிகர் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர், இளம் தலைவர் அவர்களுக்கும், நமக்குமான விருப்ப மனுக்களை கழகத் தலைமையிடம் அளித்தார்.

தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில், வரவிருக்கும் தேர்தலில் கழகம் மீண்டும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெறும். வெல்வோம் ஒன்றாக!



# காவல் துறையில் உண்மை உழைப்புக்கான அங்கீகாரம் பின்தங்கும் டிஎஸ்பிகளின் பதவி உயர்வு?, மன உளைச்சலில் சீனியர்கள் காரணம் என்ன???



**பதவி உயர்வு என்பது வெறும் அந்தஸ்து அல்ல; அது உழைப்புக்கான அங்கீகாரம் பதவி உயர்வில் பின்தங்கும் டிஎஸ்பிகள்...**

தமிழக அரசின் குரூப்1 தேர்வு மூலம் தேர்ச்சி பெற்று காவல்துறையில் நேரடி டிஎஸ்பிகளாக பணியில் சேருவது பலரின் கனவு. ஆனால் பணிநிலையின் அடுத்த கட்டங்களில் அவர்கள் எதிர்கொள்ளும் நிலை வேதனையூட்டுவதாக உள்ளது. 20 ஆண்டுகள் சேவை முடிந்த பிறகே ஐபிஎஸ் சீனியாரிட்டி பெறும் வாய்ப்பு உருவாகிறது. அதன் பின்னர் சில ஆண்டுகள் கழித்தே சீனியர் எஸ்.பி., டிஐஜி, ஐஜி போன்ற பதவிகளுக்கான வாய்ப்பு திறக்கிறது. பலருக்கு இந்த இடைவெளிக்குள்ளேயே ஓய்வு வயது நெருங்கிவிடுகிறது.

காவல்துறையில் உயர்ந்த அந்தஸ்துகளான கூடுதல் டிஜிபி, டிஜிபி போன்ற பதவிகள் பெரும்பாலும் நேரடி ஐபிஎஸ் அதிகாரிகளுக்கே கிடைக்கின்றன. அகாடமி பயிற்சிக்குப் பிறகு உதவி எஸ்.பியாக நியமிக்கப்படும் அவர்கள், 30 ஆண்டுகள் பணி முடிவில் டிஜிபி அந்தஸ்தை அடைவது சாதாரணமாக உள்ளது. ஆனால் அதே காலத்தில் பணியில் சேர்ந்த டிஎஸ்பிகள், எஸ்.பி. அல்லது டிஐஜி அந்தஸ்திலேயே ஓய்வு பெற வேண்டிய நிலை உருவாகிறது. சிலர் மட்டுமே ஐஜி வரை உயர முடிகிறது.

வருவாய் துறையின் வேகமான முன்னேற்றம் இதே குரூப் 1 தேர்வில் தேர்ச்சி பெற்று ஆர்.டி.ஓவாக பணியில் சேருபவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர், துணைச் செயலாளர், கூடுதல் செயலாளர் போன்ற பதவிகள் வரை முன்னேறும் வாய்ப்பைப் பெறுகின்றனர். மூன்று அல்லது நான்கு பதவி உயர்வுகள் அவர்களுக்கு கிடைப்பது வழக்கமாக உள்ளது. பணிக்கால இறுதியில் உயர்ந்த நிர்வாக அந்தஸ்துடன் ஓய்வு பெறுவது இவர்களுக்கு சாதாரணமாகிறது. இதனால் ஒரே தேர்வில் தேர்ச்சி பெற்ற அதிகாரிகள், துறை மாறுபாட்டினால் முற்றிலும் வேறுபட்ட முன்னேற்ற பாதையை அனுபவிக்கின்றனர். காவல்துறையில் 35 ஆண்டுகள் பணியாற்றியும் ஒரு அல்லது இரண்டு பதவி உயர்வுடன் ஓய்வு பெறும் நிலை காணப்படுகின்றது; அதே சமயம் வருவாய் துறையில் பணிநிலை உயர்வுகள் தொடர்ந்து கிடைக்கின்றன.

சீனியாரிட்டி சிக்கல்கள் மற்றும் தீர்வு கோரிக்கை காவல்துறையில் பதவி உயர்வில் சீனியாரிட்டி பிரச்சினைகள் நீண்ட காலமாக நிலவுகின்றன. நேரடி எஸ்.ஐ.களும், டிஎஸ்பிகளும் எஸ்.பி. பதவி உயர்வுக்காக போட்டியிடும்போது நீதிமன்ற வழக்குகள் தொடரப்படுகின்றன. பல ஆண்டுகள் நீளும் இந்த வழக்குகள் பதவி உயர்வை தாமதப்படுத்துகின்றன. 18 ஆண்டுகளாக எஸ்.ஐ.யாகவே நீடிக்கும் நிலையும் உருவாகியுள்ளது.

சமீபத்தில் 2003 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் நேரடி டிஎஸ்பிகளாக சேர்ந்த 22 எஸ்.பி.க்களுக்கு ஐபிஎஸ் அந்தஸ்து வழங்கப்பட்டாலும், அது சேவையின் இறுதிக்கட்டத்தில் கிடைத்ததால் அடுத்தடுத்த உயர்வுகளை அனுபவிக்கும் காலம் குறைந்துவிடுகிறது. கடந்த ஜனவரியில் 13 சீனியர் எஸ்.பி.க்கள் டிஐஜி அந்தஸ்து பெற்றனர்; ஆனால் அவர்களில் சிலருக்கே ஐஜி வரை செல்லும் வாய்ப்பு உள்ளது.

காலியிடங்களுக்கு ஏற்ப ஆண்டுதோறும் தேர்வுகள் நடத்தப்பட வேண்டும்; ஒரே பேட்சில் அதிகமான டிஎஸ்பிகள் நியமிக்கப்படக் கூடாது; பதவி உயர்வில் வெளிப்படைத்தன்மை அவசியம் என குரூப் 1 அதிகாரிகள் வலியுறுத்துகின்றனர். பதவி உயர்வு என்பது வெறும் அந்தஸ்து அல்ல; அது உழைப்புக்கான அங்கீகாரம். அந்த அங்கீகாரம் சமமாக கிடைக்க வேண்டும் என்பதே பலரின் கோரிக்கையாக உள்ளது.

# திருச்சி ஆயுதப்படையில் காவலர் மன்றம் திறந்து வைக்கப்பட்டது




தமிழ்நாடு அரசு அரசாணை **G.O.(MS)** 351, **dated** : 10.07.2025 **Home (Police-IX) Department, Secretariat, Chennai** – ன் படி அனைத்து மாவட்ட ஆயுதப்படை வளாகத்திலும் காவலர்கள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் அவர்களது குழந்தைகள் பயன்பெறும் வகையில் காவலர் மன்றம் ஆரம்பிக்கப்பட அறிவுறுத்தியதன் பேரில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஆயுதப்படை வளாகத்தில் உள்ள ஒரு கட்டிடத்தை புதுப்பித்து, அதற்கு காவலர் மன்றம் எனபெயரிட்டு, (25.02.2026) அன்று மாலை 04.30 மணிக்கு திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.செ.செல்வநாகராத்தினம், இ.கா.ப., அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மேற்படி மன்றத்தில் காவலர்களது குழந்தைகள் தங்களது ஒய்வு நேரத்தை பயனுள்ள விதமாக செலவிடும் வகையில் புத்தகங்கள், செஸ், கேரம்போர்டு மற்றும் வாலிபால், கைப்பந்து, கால்பந்து, கிரிக்கெட் போன்ற விளையாட்டு உபகரணங்களும் வைக்கப்பட்டுள்ளன. மேலும் மற்றும் 02-கணிணிகளும் பயன்பாட்டுக்காக துவக்கப்பட்டுள்ளது.மேற்படி நிகழ்வில், திருச்சி மாவட்ட ஆயுதப்படை காவலர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்கள் ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் செலவிடும்படி காவல் கண்காணிப்பாளர்திரு.செ.செல்வநாகரத்தினம்,இ.கா.ப., அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.





# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.33.85 கோடி செலவில் 11 முதல்வர் படைப்பகங்கள் மற்றும் நவீன நூலகங்களை மற்றும் சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.10.96 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் விளையாட்டரங்கம், ஆகியவற்றை திறந்து வைத்தார்.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் (3.3.2026) அன்று சென்னை, அசோக் நகர் முதல்வர் படைப்பகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக 18.87 கோடி ரூபாய் செலவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 9 முதல்வர் படைப்பகங்கள் கொண்ட நவீன நூலகங்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 424 கோடி செலவில் ஒரு முதல்வர் படைப்பகம் கொண்ட நவீன நூலகம் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு. பி.கே.சேகர்பாபு மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜெ.கருணாநிதி, துணை மேயர் திரு. மு.மகேஷ்குமார், சென்னை மாநகர நூலக ஆணையக் குழு உறுப்பினர் கவிஞர் மனுஷ்ய புத்திரன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. செயலாளர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ, பள்ளிக் கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், இ.ஆ.ப, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உறுப்பினர் செயலர்முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் (3.3.2026) பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க. நகர் மண்டலம், லோகோ ஸ்கீம் 1-வது தெருவில் 2 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள முதல்வர் விளையாட்டரங்கத்தை திறந்து வைத்து, குத்துச் சண்டை பயிற்சியை பார்வையிட்டார். உடன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு. பி.கே. சேகர்பாபு, மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.

---






மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க ஸ்டாலின் அவர்கள் (3.3.2026) சென்னை, அசோக் நகரில் 7,874 சர அடி கட்டடப் பரப்பளவில் 1274 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு. பி.கே.சேகர்பாபு மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜெ.கருணாநிதி துணை மேயர் திரு. மு.மகேஷ்குமார், சென்னை மாநகர நூலக ஆணையக் குழு உறுப்பினர் கவிஞர் மனுஷ்ய புத்திரன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப, பள்ளிக் கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் சந்தரமோகன், இ.ஆ.ப, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உறுப்பினர் செயலர் முதன்மைச் செயலாளர் திரு.கோபிரகாஷ், இ.ஆ., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கே.கே. நகர் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பு காவலாளியை தாக்கி கொலை முயற்சியில் ஈடுபட்ட டெலிவரி ஊழியர் கைது.



Dinesh - R-7 p.s. Accused

சென்னை, நெசப்பாக்கத்தைச் சேர்ந்த வேல்முருகன், வ/47 என்பவர், கே.கே. நகர், வேம்புலியம்மன் கோயில் தெருவிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பில் காவலாளியாக வேலை செய்து வருவதாகவும், நேற்று (03.03.2026) காலை, வேல்முருகன் அடுக்குமாடி குடியிருப்பில் பணியிலிருந்தபோது, ஆக்டிவா இருசக்கர வாகனத்தில் வந்த பொருட்கள் டெலிவரி செய்யும் நிறுவன ஊழியர் ஒருவர் நுழைவு வாயிலில் தெரிவிக்காமல் இருசக்கர வாகனத்தில் உள்ளே நுழைந்ததால், வேல்முருகன் அந்த நபரை தடுத்து ஏன் இப்படி வந்தீர்கள்? என கேட்டபோது, இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், இதனால் ஆத்திரமடைந்த டெலிவரி ஊழியர் இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்று வேல்முருகன் மீது மோதி, பின்னர் வேல்முருகனை கையால் தாக்கியதில் வேல்முருகன் நிலைகுலைந்து கீழே விழுந்ததில் தலையில் அடிப்பட்டு மயங்கி வாயிலிருந்து இரத்தம் வந்ததாகவும், இதனால் அந்த நபர் இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றதாகவும், இரத்தக்காயமடைந்த வேல்முருகனை தனியார் மருத்துவமனையில் சேர்த்து பின்னர் இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் சுயநினைவின்றி சிகிச்சை பெற்று வருவதாகவும், உடன் பணிபுரிந்து வரும் காவலாளி சுந்தரம், வ/63 என்பவர் R-7 கே.கே.நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மீது கொலை முயற்சி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

R-7 கே.கே.நகர் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி தினேஷ், வ/25, வெங்கடேஸ்வரா நகர், விருகம்பாக்கம், சென்னை என்பவரை நேற்று (03.03.2026) கைது செய்தனர். அவரிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய ஆக்டிவா இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.கைது செய்யப்பட்ட எதிரி தினேஷ் விசாரணைக்குப் பின்னர், நேற்று (03.03.2026) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

---



# ஆவடி காவல் ஆணையரகம் போக்குவரத்து போலீசாரின் விழிப்புணர்வு நிகழ்ச்சி.

ஆவடி போக்குவரத்து காவல் உதவி ஆணையாளர் திரு.ஜெயச்சந்திரன் அவர்களால் இன்று 28.02.2026 சென்னீர்குப்பம் பகுதியில் உள்ள கனரக வாகன ஓட்டுனர்களுக்கு சாலை பாதுகாப்பு விதிகள் குறித்தும், சாலையோரம் கனரக வாகனங்களை நிறுத்தி வைப்பதால் ஏற்படும் விபத்துக்கள் குறித்தும், கனரக வாகனங்கள் நிறுத்தும் இடங்களில் மட்டுமே வாகனங்களை நிறுத்த அறிவுறுத்தியும், மேலும் விபத்தில்லா சாலை பயணம் மேற்கொள்வதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

# 9 கோடி ரூபாய் மதிப்பிலான போதை மாத்திரைகளை பறிமுதல் செய்த புதுக்கோட்டை மாவட்ட காவல்துறையினர்...





புதுக்கோட்டை மாவட்டத்தில் போதை மாத்திரைகள் கடத்துவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அபிஷேக் குப்தா இ.கா.ப., அவர்கள் உத்தரவின்படி புதுக்கோட்டை மாவட்ட காவல்துறையினர் அதிரடி சோதனை நடத்தி ராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்கு கடத்த இருந்த 9 கோடி ரூபாய் மதிப்பிலான போதை மாத்திரைகளை பறிமுதல் செய்து, கடத்தல் சம்பவத்தில் ஈடுபட்ட நான்கு பேரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்..

---

# மாநில தகவல் ஆணையர்கள் நியமனம்



ஓய்வுபெற்ற IAS அதிகாரி அதுல்ய மிஸ்ரா, ஓய்வுபெற்ற IPS அதிகாரி அபய் குமார்சிங் ஆகியோரை மாநில தகவல் ஆணையர்களாக நியமித்து தமிழக அரசு அரசாணை வெளியீடு, மாநில தகவல் ஆணையர்களின் எண்ணிக்கையை 6இல் இருந்து எட்டாக உயர்த்தி புதிதாக உருவாக்கப்பட்ட 2 இடங்களுக்கு அதிகாரிகள் நியமனம். அவர்கள் 3 ஆண்டுகள் அல்லது 65 வயது நிறைவடையும் வரை பதவியில் இருப்பார்கள்..

# புதுக்கோட்டை மாவட்ட காவல்துறை




திருச்சி மத்திய மண்டல காவல்துறை தலைவர் திரு.பாலகிருஷ்ணன் இ.கா.ப., அவர்கள் வழிகாட்டுதலின் படி குற்றவாளிகளை அடையாளம் காணவும், கண்காணிக்கவும் உதவும் வகையில் அமைக்கப்பட்ட **DATA CENTER UNIT**-யை 02.03.2026-ம் தேதி புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அபிஷேக் குப்தா இ.கா.ப., அவர்கள் திறந்து வைத்து சிறப்பித்தார்கள்...

---



நீலகிரி மாவட்டம் கோத்தகிரி வட்டம் குஞ்சப்பனை ஊராட்சிக்குட்பட்ட வெள்ளேரி கொம்பை பழங்குடியினர் கிராமத்தின் அடிப்படை வசதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தன்னீரு, ஐஏஎஸ்.அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில், ஏழைகளிடம் மின்வாரியம் மாமூல் வசூல், தட்டி கேட்பாரா...?

# முதல்வர் ஸ்டாலின்!!!



**கலைஞரின் கனவு இல்லம் திட்டம் களங்கமின்றி தொடர தடையாக நிற்கும் கலவாணித்தனம். தமிழகத்தில் ஏழை, எளிய மக்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படுத்திய மக்கள் நலத்திட்டங்களில் மிக முக்கியமானது கலைஞர் கனவு இல்லம் திட்டம். மு.க. ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு, குடிசையில்லா தமிழகம் என்ற இலக்குடன் செயல்படுத்தி வரும் இந்தத் திட்டம், ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு பாதுகாப்பான குடியிருப்பை வழங்கி வருகிறது. ஒரு வீடு என்பது சுவர்கள் மட்டுமல்ல அது ஒரு குடும்பத்தின் மரியாதை, பாதுகாப்பு, எதிர்கால நம்பிக்கை.**

இத்தகைய உயர்ந்த நோக்கத்துடன் செயல்படும் திட்டத்தின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் விதமாக சில மின்வாரிய அதிகாரிகள் செயல்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டு தற்போது எழுந்துள்ளது. தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ஒட்டங்காடு பஞ்சாயத்துக்கு உட்பட்ட 9 கிராமத்தில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு கட்டும் பயனாளரிடம், மீட்டர் ரீடிங் எடுக்கும் தற்காலிக மின் கணக்காளர் மணிகண்டன் மற்றும் மின் வாரிய foreman செந்தில்குமார் சென்று, மின்சார ஸ்குவாட் அழைத்து பெரிய அபராதம் விதிப்போம் என மிரட்டியதாக கூறப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் வீடு இல்லாதவருக்கு வீடு என்பதே. குடிநீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் வாழ்க்கைக்கு அவசியம் என்பதில் யாருக்கும் ஐயமில்லை.

ஆனால் வீடு கட்டும் பணியின் போது எந்த வகை நீர்வழி பயன்படுத்த வேண்டும், எந்த வகை மின் இணைப்பு கட்டாயம் எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்ட கடுமையான வழிகாட்டுதல்கள் திட்ட ஆவணங்களில் வெளிப்படையாக இல்லை.

ஒரு வீடு கட்டும்போது வெல்டிங், இரும்பு வெட்டி அமைத்தல், தச்சு வேலை, டைல் வேலை போன்றவை மின்சார கருவிகளால் மேற்கொள்ளப்படுவது சாதாரணம். இத்தகைய சூழலில் தற்காலிக மின் இணைப்பு (**temporary connection**) அவசியமெனில், அது குறித்து முன்கூட்டியே மக்களுக்கு தெளிவான அறிவிப்பு வழங்கப்பட வேண்டாமா? ஒவ்வொரு பயனாளரும் அரசின் ஒவ்வொரு துறையின் நடைமுறைகளையும் தனியாக அறிந்து செயல்பட வேண்டுமா என்ற கேள்வி எழுகிறது.

இந்தத் திட்டத்தின் ஒதுக்கீடுகள் **BDO**, மேற்பார்வையாளர் (**Overseer**) போன்ற துறையினரால் கண்காணிக்கப்படுகின்றன. இது தொடர்பாக **B.D.O.** மற்றும் பேராவூரணி **AD.** மின்சார நிர்வாக பணியாளர் பிரகாஷ் அவர்களிடம் விசாரிக்கையில், மின் இணைப்புக்கான தனிப்பட்ட கட்டாய வழிகாட்டுதல் இல்லை; பயனாளியின் தேவைக்கு ஏற்ப நடைமுறை பின்பற்றப்படுகிறது என்பதே விளக்கம். அப்படியானால் சிய அதிகாரிகள் திடீரென விதிமுறைகள் பேசுவது எந்த அடிப்படையில்? வீடு கட்டும் ஆரம்ப நிலையிலேயே மின் வாரிய விதிமுறைகள் இருந்தால், ஏன் அவை தெளிவாக அறிவிக்கப்படவில்லை? தற்காலிக மின் இணைப்பு அவசியம் என்றால், ஏன் முன்கூட்டியே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவில்லை? வீடு முடிவடையும் தருவாயில் திடீரென மிரட்டல் விடுப்பது, மக்கள் மனதில் சந்தேகத்தை உருவாக்குகிறது.



மேலும், சம்பந்தப்பட்ட மீட்டர் ரீடிங் ஊழியர் சேவை மாற்றம் போன்ற விஷயங்களில் பணம் வசூலித்து, முறையான ரசீது வழங்காமல் **foreman**னுடன் சேர்ந்து தனிலாபம் அடைகிறார் என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது. குறிப்பிட்ட வீட்டில் முன்பே லஞ்சம் கோரியதாகவும், அது வழங்கப்படாததால் கூஷ்லிஷெளதுழிஜ-ஐ அழைத்து அழுத்தம் கொடுத்ததாகவும் கிராம மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்த குற்றச்சாட்டுகள் உண்மையாக இருந்தால், அது ஒரு தனிநபர் தவறாக மட்டும் பார்க்க முடியாது அது நேரடியாக அரசின் நற்பெயரையே பாதிக்கும் செயல். குறிப்பாக தேர்தல் காலம் நெருங்கி வரும் இந்த நேரத்தில், மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தும் அதிகாரிகள் வெளிப்படைத்தன்மையுடன், நேர்மையுடன் செயல்பட வேண்டியது மிகவும் அவசியம்.

தேர்தல் காலத்தில் எதிர்க்கட்சிகள் குறை கூறும் சூழல் உருவாகாமல் இருக்க, அரசு திட்டங்களில் ஈடுபடும் ஒவ்வொரு துறையும் பொறுப்புடன் நடக்க வேண்டும். சிலர் மேற்கொள்ளும் ஊழல் செயல்கள், முழு அரசின் மீது குற்றச்சாட்டு எழும்ப வழிவகுக்கிறது.

முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசு பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது. கலைஞர் கனவு இல்லம் திட்டம் அதன் முக்கிய சின்னமாக திகழ்கிறது. ஆனால், சில மின்வாரிய அதிகாரிகளின் மிரட்டல் மற்றும் லஞ்ச குற்றச்சாட்டுகள் அந்த உயர்ந்த முயற்சிக்கு கரும்புள்ளி வைக்கும் அபாயத்தை ஏற்படுத்துகின்றன.

இத்தகைய அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? ஊழல் மற்றும் மிரட்டல் நிரூபிக்கப்பட்டால், அவர்கள் கடுமையாக தண்டிக்கப்படுவார்களா? தேர்தல் நேரத்தில் மக்களின் நம்பிக்கையை காக்க, அரசு உடனடி விசாரணை மேற்கொண்டு தற்காலிக பணியாளர் மணிகண்டன் மற்றும் ஃபோர்மென் செந்தில்குமார் மீதும் சட்டரீதிக சட்ட நடவடிக்கை வேண்டும். மக்கள் எதிர்பார்ப்பது ஒன்றே நல்ல திட்டங்கள் களங்கமின்றி தொடர வேண்டும். சிலர் செய்த தவறுகளால், முழு அரசின் நற்பெயர் பாதிக்கப்படக் கூடாது. கலைஞர் கனவு இல்லம் திட்டம் மக்கள் கனவுகளை நிறைவேற்றும் பாலமாகத் தொடர வேண்டும்; ஊழலின் நிழல் அதை மூடக்கூடாது.



# மனித நேயமிக்க மாமனிதருக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்

பெருமதிப்பிற்குரிய திருமிகு. **K.S.** கந்தசாமி **I.A.S.**,ஐயா, தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குனர் அவர்களுக்கு இனிய பிறந்தநாள் நல் வாழ்த்துக்கள். கல்வி மட்டுமே இந்த சமுதாயத்தில் உள்ள இடைவெளியை தகர்க்கும் ஆயுதம் என ஆழமாக நம்புகின்றவர். அவருடன் இணைந்து கல்வி இடைநிறுத்தம் செய்த மாணவியை அதே சட்ட கல்லூரிக்கு படிக்க அனுப்பி பெண் பிள்ளையின் கல்வியை உறுதி செய்ததும், அந்த பெண் பிள்ளைக்கு மட்டுமல்ல அவளை பார்த்து கொண்டிருக்கும் அனைத்து பெண் பிள்ளைகளுக்குமான நம்பிக்கையாகும். குழந்தைகளின் மீது அலாதியான அன்பு கொண்டவர். தற்போது **TAHDCO**-வின் வழியாகவும், பணியாற்றும் இடங்களில் எல்லாம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி விளிம்பு நிலை மக்களுக்கு நம்பிக்கையாய் திகழ்பவர்.சத்தமில்லாமல் பல நற்காரியங்களை செவ்வனே செய்பவர். எளியவர்கள் எளிதில் அணுகக்கூடிய ஒருவர்.மங்காத தமிழ் போல இனிமையாக வாழ வாழ்த்துகள் ஐயா.

---



திருச்சி மத்திய மண்டல காவல்துறை தலைவர் திரு.வே.பாலகிருஷ்ணன் இ.கா.ப அவர்களின் உத்தரவின்படி, நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் **Dr.K.S.**பாலகிருஷ்ணன் அவர்களின் தலைமையில் இன்று மாவட்ட காவல் அலுவலகத்தில் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கு புலன் விசாரணை செய்வது குறித்து சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.




# விருகம்பாக்கம் சார்பதிவாளர் அள்ளி குவிக்கும் பணக்கட்டுகள்..., புரோக்கர்கள் கெடுபிடியால் பரிதவிக்கும் அப்பாவி பொதுமக்கள், தட்டி தூக்க யார் வருவார்!!,

**சென்னை, விருகம்பாக்கம் தலை நகரின் அடையாளங்களில் ஒன்று இப்பகுதியில் உள்ள இடங்களில் வணிக வளாகம், அடுக்குமாடி குடியிருப்பு, பங்களா வீடுகள், விரிவாக்கம் மனைகள் என பல்வேறு காரணங்களுக்கும் இடம், விற்க வாங்க வேண்டும் என்றாலும் பத்திரப்பதிவுகள் எதுவும் பதிய வேண்டும் என்றால் விருகம்பாக்கம் சார் பதிவாளர் அலுவலகத்தை நாட வேண்டும் ஆகையால் எப்போதும் விருகம்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கூட்டமாகவே இருக்கும்.**

விருகம்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகம் சர்ச்சைக்குரிய சூழ்நிலைக்குள் சிக்கியுள்ளது. பொதுமக்கள் எளிதாக சொத்து பதிவு செய்ய அரசு பல ஆன்லைன் வசதிகளை அறிமுகப்படுத்தியிருந்தாலும், தரை மட்டத்தில் நிலைமை மாறவில்லை என குற்றச்சாட்டுகள் எழுகின்றன. தொடர்ந்து அதிர்ச்சி தகவல்கள் வெளியாகி வருகின்றன. சாதாரணமாக ₹30,000 என்று தொடங்கும் பதிவாளருக்கு கொடுக்க வேண்டிய செலவுஎன்ற பெயரில் பத்திர எழுத்தர்களால் கேட்கப்படும் லஞ்சத் தொகை, சொத்தின் மதிப்பை பொறுத்து பல மடங்கு உயர்ந்து, சில நேரங்களில் ஒரு லட்ச ரூபாய் வரை சென்றடைகிறது என பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

சிறிய அளவிலான நிலம் அல்லது வீட்டு பதிவு என்றாலும் கட்டாயமாக ஒரு நிர்ணய தொகை. ஆனால் கோடிக்கணக்கான மதிப்புள்ள சொத்துகளுக்கு பதிவு செய்யும்போது, லஞ்சத் தொகையும் அதற்கேற்றவாறு உயர்த்தப்படுவதாக குற்றச்சாட்டு எழுகிறது. இதற்கு மேலாக, பதிவு ஆவணத்தின் நகல் பெற 10,000 வரை கூடுதல் தொகை வசூலிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில், தினமும் சார்பதிவாளர் அலுவலகத்தில் காணப்படும் கூட்டத்தை பார்த்தால், இந்த லஞ்ச வசூல் மூலம் ஒரு நாளில் பத்திர எழுத்தர் எத்தனை லட்சங்கள் பார்க்கிறார் என்ற கேள்வி தானாகவே எழுகிறது. அரசு நிர்ணயித்த கட்டணங்களைத் தவிர்த்து, மக்கள் கட்டாயப்படுத்தப்பட்டு கூடுதல் தொகை செலுத்த வேண்டிய நிலை நீடித்தால், அது வெளிப்படைத்தன்மைக்கும் சட்டத்திற்கும் எதிரானதாகும்.

அரசு டிஜிட்டல் பதிவு, ஆன்லைன் முன்பதிவு, நேரடி கட்டண செலுத்துதல் போன்ற வசதிகளை அறிமுகப்படுத்தி, இடைத்தரகர்களின் ஆதிக்கத்தை குறைப்பதே நோக்கம் என அறிவித்தது. ஆனால் தரை மட்டத்தில் இத்தகைய குற்றச்சாட்டுகள் எழுவது, நடைமுறையில் கண்காணிப்பு பலவீனமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மக்கள் கேட்பது எளிய கேள்விதான் இத்தகைய குற்றச்சாட்டுகள் மீது அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்குமா? சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது விசாரணை நடைபெறுமா?

பதிவு அலுவலகம் என்பது ஒரு குடும்பத்தின் வாழ்நாள் சேமிப்புடன் தொடர்புடைய இடம். அங்கு ஊழல் நிழல் நீடித்தால், அது மக்களின் நம்பிக்கையை சிதைக்கும். குற்றச்சாட்டுகள் உண்மையாக இருந்தால், பொறுப்புக்கூற வேண்டியது அவசியம். அரசு தக்க நடவடிக்கை எடுத்து, பதிவு செயல்முறையில் முழுமையான வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய வேண்டியது காலத்தின் கோரிக்கையாக உள்ளது. இவர்கள் மீது நடவடிக்கை எடுப்பாரா பத்திரபதிவு தறை ஐ.ஜி. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்.

# கும்பகோணம் வரதராஜ பெருமாள் கோயிலில் சிறப்பு அலங்காரத்தில் காட்சியளித்த ஸ்ரீதேவி, பூதேவி உடனாய அத்திவரதரை நீண்ட வரிசையில் நின்று ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

**தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வரதராஜ பெருமாள் கோயிலில் பாதாள அறையில் இருந்து 12 ஆண்டுகளுக்கு பிறகு வெளியே எடுக்கப்பட்ட ஸ்ரீதேவி, பூதேவி உடனாய அத்திவரதரை ஏராளமான பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று தரிசனம் செய்தனர்.**



கும்பகோணம் பிரம்மன் கோயில் தெருவில் உள்ள வரதராஜ பெருமாள் கோயிலில் மூலவர் சந்நிதிக்கு கிழக்கில் உள்ள பாதாள அறையில் அத்தி மரத்தாலான சுமார் ஒன்றரை அடி உயரம் உள்ள ஸ்ரீதேவி, பூதேவி உடனாய அத்திவரதர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிலையை 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை வெளியே எடுத்து பக்தர்களின் தரிசனத்துக்கு வைக்கப்படுவது வழக்கம். அதன்படி, 12 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த சிலை நேற்று முன்தினம் வெளியே எடுக்கப்பட்டு பக்தர்களின் தரிசனத்துக்காக வைக்கப்பட்டது.

இதற்காக நேற்று அதிகாலை 5 மணி முதல் பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று ஸ்ரீதேவி, பூதேவி உடனாய அத்திவரதரை தரிசனம் செய்தனர். இதில், தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா, கேரளம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த ஏராளமான பக்தர்களும் திரளாக வந்து தரிசனம் செய்தனர். வரும் 10-ம் தேதி வரை அத்திவரதரை தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நாட்களில் தினமும் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும் தைலக் காப்பு, புஷ்ப சேவை, ஊஞ்சல் சேவை நடைபெறும்.

கும்பகோணம் மேற்கு காவல் ஆய்வாளர் சிவக்குமார் தலைமையில் 100-க்கும் மேற்பட்ட போலீஸார் மற்றும் ஊர்க் காவல் படையினர் பாதுகாப்பு பணியிலும், மாநகராட்சி ஆணையர் காந்திராஜ் தலைமையில் 50-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் தூய்மை மற்றும் சுகாதார பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை சவுராஷ்டிரா தர்மபரிபாலன கமிட்டி நிர்வாகிகள் செய்துள்ளனர்.



02.03.2026-ம் தேதி தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் மாசிமகம் மற்றும் அத்திவரதர் கோவில் திருவிழாக்களில் பாதுகாப்பு அலுவலாக நியமிக்கப்பட்ட காவலர்களுக்கு கோடை வெயிலின் தாக்கத்தை குறைக்கும் வண்ணம் **Oral Rehydration Solution** பானங்கள் வழங்கப்பட்டது.

# சமூகப்பற்றாளன் ஞானச்சித்தன் எழுதும் சிந்தனை தொடர்.....

# ஆத்திசூடி – ஆறுவது சினம்.

மனித இனத்திற்கு தனக்கும் சரி, தன்னை சார்ந்தவர்களுக்கும் சரி, இந்த சமுதாயத்திற்கும் சரி அதீத தீங்கு விளைவிக்கும் ஒரு உணர்ச்சியான மனிதனின் மனதின் நிலையே சினம் எனப்படுகிறது.

சினம் அல்லது கோபம் என்பது மனவெழுச்சியால் ஏற்படும் கோப நிலையைக் குறிக்கும் ஒரு தமிழ்ச் சொல் ஆகும். ( **Anger, Wrath, Rage, Fury, Resentment** போன்ற ஆங்கில வார்த்தைகளில் குறிப்பிடப்படுகிறது ) மேலும் சினத்திற்கு பல்வேறு தமிழ் பெயர்கள் உள்ளன, அவை பின்வருமாறு...

1) கோபம் = என்பது சிறிது பொழுது நிற்பது.
2) சினம் = என்பது நீடித்து நிற்கும் கோபம்.
3) சீற்றம் = என்பது சீறி எழும் சினம்.
4) வெகுளி = என்பது நெருப்புத் தன்மை உள்ள கடும் சினம். (வெகுளாமை அதிகாரம் திருக்குறள்)
5) காய்வு = என்பது எரிவு உணர்வு தரும் சினம்.
6) உருத்திரம் = என்பது தீ போல் சடுதியில் பரவும் கடும் கோபம்.
7) கொதிப்பு = என்பது கண் போன்ற உறவினர்க்குச் செய்யப்பட்ட கொடுமை பற்றிப் பொங்கி எழும் சினம்.
8) எரிச்சல் = என்பது மனதை உறுத்தும் சினம்.
9) கடுப்பு = என்பது பொறாமையோடு கூடிய சினம்.
10) கறம் = என்பது பழிவாங்கும் சினம்.
11) வன்மம் = என்பது எதிர்வினை ஆற்றத் தூண்டும் சினம்.
12) கறுவு = என்பது தணியாக் கோபம்.
13) கறுப்பு = என்பது கறுப்பன் முகம் கறுத்துத் தோன்றும் சினம்.
14) சிவப்பு = என்பது சிவப்பன் முகம் சிவக்கத் தோன்றும் சினம்.
15) செயிர் = என்பது முகத்தில் செந்நிறம் பாய்ச்சும் சினம்.
16) விளம் = என்பது நச்சுத் தன்மையான கோபம்.
17) வெறி = என்பது அறிவிழந்த சினம்.
18) முனிவு அல்லது முனைவு = என்பது வெறுப்போடு கூடிய சினம்.
19) கதம் = என்பது என்றும் இயல்பான சினம்.
20) கனிவு = என்பது முகம் சுளிக்கும் சினம்.
21) செற்றம் அல்லது செறல் = என்பது பகைவனை அழிக்கும் சினம்.
22) ஊடல் = என்பது மனைவி கணவனோடு கோபித்துக் கொண்டு உரையாடாத மென்கோபம்.
23) புலவி = என்பது ஊடலின் வளர்ந்த நிலை.
24) துனி = என்பது ஊடலின் முதிர்ந்த நிலை
25) சடைவு = என்பது உறவினர் குறை கூறும் அமைதியான சினம்.

ஆசை,கோவம்,களவு கொள்பவன் பேச தெரிந்த மிருகம் என்றும், அன்பு நன்றி கருணை கொண்டவன் மனித வடிவில் தெய்வம் என்றும் கவியரசு கண்ணதாசன் மக்கள் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் நடிப்பில் உருவான ஆண்டவன் கட்டளை என்கின்ற திரைப்படத்தின் பாடலில் சுட்டிக் காட்டி இருப்பார்...

கடல் அலைகளைப் போன்ற மனிதனின் மனதில் எழுகின்ற பொறாமை, துவேஷம், காதல், காமம் போன்ற உணர்ச்சிகள் என்றுமே ஆறாது. எரிமலையைப் போல மேலும் மேலும் ஒரு மனிதனின் மனதிற்குள் கொழுந்து விட்டு எரியும் தன்மையுடையது .. காலப்போக்கில் ஆறிவிடும் அல்லது மாறிவிடும் என்று உறுதியாக கூற முடியாது, ஆனால் சினம் என்றால் அது ஆறுவது ஆகும், ஆம் மணிக் கணக்கில், நாள் கணக்கில், மாதக் கணக்கில் ஒரே நிலையாக சினமானது இருக்காது காலத்தின் ஓட்டத்தில் அது தானாக ஆறிவிடும் அல்லது மாறிவிடும். அதனால்தான் மாம்பழம் கிடைக்காமல் கோபத்தின் உச்சிக்கு சென்ற தமிழ் கடவுள் முருகன் பழனி மலையின் மீது குடிகொண்டார். அவரது சினத்தை ஆற்றுப்படுத்துவதற்காக ஆறுவது சினம் கூறுவது தமிழ் அறியாத சிறுவனா நீ என்று கே.பி.சுந்தராம்பாள் அவர்கள் திருவிளையாடல் திரைப்படத்தில் பாடி இருப்பார். ஆறுவதுதான் சினம்.

மேலும் நாம் அன்றாடும் பருகும் பால், டீ, காபி போன்ற பானங்கள் சூடாக இருந்தால் என்ன செய்வோம்? அதை இன்னொரு கிளாசிலோ அல்லது பாத்திரத்திலோ மாற்றி மாற்றி ஊத்துவோம். அதை ஆத்துவோம் அல்லவா ? அது போல், சினம் வந்தால் இடத்தை மாற்றினால் போதும். சினம் மாறி விடும்.

யார் மீதாவது கோவம் உங்களுக்கு கோவம் வந்தால், முதலில் அந்த இடத்தை விட்டு நீங்கி விடுங்கள். கோவம் ஆறும் என்று பெரியோர்கள் சிறியவர்களுக்கு அறிவுரை கூறுவது நடைமுறை உண்மையாகும்.

இரண்டாவது, பால் பாத்திரம் சூடாக இருந்தால், அதை குளிர்ந்த நீரில் உள்ள பாத்திரத்தில் வைத்தால் அதன் சூடு குறைந்து விடும். அது போல்,

கோவம் வரும் போது இடத்தை மாற்றி அமைதியான சூழ்நிலைக்கு சென்று விட்டால், கோவம் ஆறி விடும். எனவே நீங்கள் கோவமாய் இருக்கும் போது பேசாதீர்கள், சண்டை போடாதீர்கள். அமைதியாய் இருங்கள்...ஏனென்றால் ...ஆறுவது சினம்....ஆறுவது சினம். ஆறுவது- அடங்க வேண்டியது; சினம்- கோபம். நாம் அடக்க வேண்டியது சினமே ஆகும்.

கோபம் என்பது ஒரு தீவிரமான உணர்ச்சி நிலையே ஆகும், இதில் ஒரு வலுவான, சங்கடமான மற்றும் ஒத்துழைக்காத எதிர்வினை, உணரப்பட்ட தூண்டுதல், காயம் அல்லது அச்சுறுத்தல் ஆகியவை கோபத்தில் அடங்கும் படிநிலைகளாகும். எனவே கோபம் இல்லாமல் இருப்பது என்பது மன அமைதிக்கான விரைவான வழியாகும். ஒருவருடைய ஆசைகளுக்கு இடையூறு ஏற்படுவதால் கோபம் ஏற்படுகிறது.

புலன் கவர்ச்சியால் மனம் சிறு சிறு பொருளையும் இன்பங்களையும் துய்ப்பதால் அறிவுத்திறமையும், ஆற்றலும் தடைப்பட்டு, தேக்கமுற்று, அதன் இயக்க விரைவு தன்முனைப்பு என ஆகிறது. இந்தத் தன்முனைப்பு, பொருட்கள் மீதும் மக்கள் மீதும் தொடர்பு கொண்டு பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால்கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் எனும் ஆறு உணர்ச்சிவயமான ஆறுகுணங்களோடு மனிதன் செயல்புரியும் போதுதான் பொய், சூது, களவு, கற்பு நெறி பிறழ்தல், கொலை எனும் ஐந்து பெரும் பழிச்செயல்களைப் புரிகிறான். மனிதகுல வாழ்வில் துன்பங்களும், சிக்கல்களும், பிணக்குகளும் போர்களும் சினத்தால் உண்டாகின்றன. கோபமாக எழுந்தவன் நஷ்டத்தோடு உட்காருவான் என்கின்ற ஒரு பழமொழியானது உண்டு.

பல கேடுகளை விளைவிக்கும் சினம் என்பதை மனிதர்கள் அறவே தவிர்க்க வேண்டும். சினம் ஒருவரிடம் எழும்போது உடலிலும், மனதிலும், சுற்றத்தாருக்கும் பல்வேறு வகைகளில் கேடுகள் ஏற்படும். மேலும் இரத்தத்தை விரைவாக ஓடச் செய்து இரத்த அழுத்தத்தை (**Blood Pressure**) அதிகரிக்கும். இதனால் இருதயத் துடிப்பும், நரம்புகள் இயக்கமும் பாதிக்கப்பட்டு கை, கால்கள் நடுக்கமும் உண்டாகும். சினம் கொள்ளும் போது சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ தவிர்க்க முடியாதபடி ஒரு மனிதனுக்கு தீமைகள் ஏற்படுகிறது. அடிக்கடி சினம் கொள்பவர்கள் உடல் நலமும், மனவளமும் என்ன ஆகும். இந்த விளக்கங்களை உள்ளடக்கியே, சினம் சேர்ந்தாரைக் கொல்லி என்று வெகுளாமை அதிகாரத்தில் கூறுகிறார் அய்யன் திருவள்ளுவர்.

**சினம் அறுமிடத்தில்தான் ஞானம்**

தோன்றும். அருள்துறைக்கு அதாவது ஆன்மீகத்திற்கு சினமானது நேர் எதிர்நிலை. அதனால்தான்,

சினம் மாண்டுபோக அருள் சேர்ந்திருப்பதெக்காலம்' என்று பத்ரகிரியார் ஏங்கினார்.

அருளா, நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும் அனுத்துணையும் சினம் காமம் அடையாமை வேண்டும்' என்று வேண்டினார் வள்ளலார். கோபம் ஒவ்வொருவருக்கும் வருகிறது. அதை ஒழித்துவிட வேண்டும் என்று பெரும்பாலோர் விரும்புகிறார்கள். ஆனால் வெற்றி பெற்றவர்கள் மிகச்சிலரே.

ஒரு நபருக்கு அஸாத்திய கோபம் அடிக்கடி வந்தது. அதிக முன்கோபம் கொண்டவராக வாழ்ந்தார், எவர் மீதும் எரிந்து விழுவார்- அதி பயங்கர சிடுமூஞ்சி. அந்த ஊருக்கு ஒரு குரு வந்தார்.

குருவே! என் கோபத்தை அடக்க என்னால் முடியவில்லையே! சிலர் கோபம் வந்தால் 01 முதல் 100 வரை எண்ணிவிட்டுச் செயல்படு அல்லது பேசத் துவங்கு என்றனர். அதையும் செய்து பார்த்தேன்; பலிக்கவில்லை; நூறு எண்ணிய பிறகும் கோபம் வருகிறது! என்ன செய்வேன்?

இன்னும் சிலர் கோபம் வந்தால் வரக்கூடிய வசவுகளை எல்லாம் ஒரு தாளில் எழுது; ஒரு மணிநேரத்துக்குப் பின் வாசி; பின்னர் அதை பேச முயற்சி செய்; நீயே அதைப் பார்த்து படிக்கும் பொழுது நகைத்து விட்டு விடுவாய் என்றனர். அதையும் செய்து பார்த்தேன். பலன் இல்லை. கோபம் வந்தால் கண்ணை மூடுகிறேன்; வாயைத் திறக்கிறேன்; என்ன பேசுகிறேன் என்ன செய்கிறேன் என்றே தெரியவில்லையே; என்னைக் காப்பாற்றுங்கள் என்றான்.

**குரு சொன்னார்:**

இனிமேல் கோபம் வந்தால் மெதுவாக பத்து அடி பின்னே நடந்து போ; பின்னர் கோபம் அடங்கிய பின்னர் முன்னே வா என்றார். அவனும் குருவுக்கு ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டு நடையைக் கட்டினான். ஒரு முறை இரண்டு நாள் வெளியூருக்குப் பயணம் செய்துவிட்டு அர்த்த ராத்ரியில் வீடு திரும்பினான். மனைவியருகே வேறு ஒருவர் படுத்திருந்து அசைவது தெரிந்தது. உடனே தன்மனைவி மீது அதி பயங்கர சந்தேகமும் கோபமும் பொங்கியது ஒரே அடியில் மனைவியையும் கள்ளக் காதலனையும் சத்தமில்லாமல் அடித்து நொறுக்க அடுப்படியில் இருந்து குழவியையும் இரும்பு உலக்கையையும் கொண்டு வந்தான்.

திடீரென்று ஒரு நாள் குரு சொன்னது அவனது நினைவுக்கு வந்தது. எதையும் கோபத்தில் செய்து விடாதே பத்து அடி பின்னோக்கி நடந்து போ என்று

சொன்ன அறிவுரையை நினைத்தான். மெதுவாக இருட்டில் பின்னால் பத்து அடி நடந்தான். பத்து அடிகள் நடப்பதற்குள் ஏதோ ஒரு பாத்திரத்தில் கால்பட்டு அது உருண்டு பெரிய சப்தத்தை எழுப்பியது.

அதைக்கேட்டு மனைவியின் பக்கத்தில் இருந்த உருவம் அம்மா, அம்மா வீட்டில் யாரோ திருடன் வந்திருக்கிறான் போல இருக்கிறது என்று கூச்சலிட்டாள்.

உண்மையில் அவனது மனைவி, அடுத்த தெருவில் வசிக்கும் தன் மகளை அன்றிரவு துணைக்கு படுத்துக்கொள்ள அழைத்திருந்தாள். இவன் மட்டும் கோபத்தில் உலக்கை அடி கொடுத்திருந்தால் மனைவியும் மகளும் ஒரு பாவமும் அறியாத இரண்டு உயிர்கள் மேலுலகம் சென்றிருக்கும்!

அவன் தான் செய்ய நினைத்த தவறை அடிக்கடி நினைத்துப் பார்த்தான்,அதை எண்ணி எண்ணி மனம் வருதினான். குருவுக்கு மானசீகமாக மேலும் ஒரு கும்பிடு போட்டான்.

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்
அல்லிடத்துக் காக்கின்என் காவாக்கால் என்.

செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்அதனின் தீய பிற.

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய பிறத்தல்
அதனான் வரும். நகையும் உவகையும் கொல்லும்
சினத்தின் பகையும் உளவோ பிற.

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்.

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி
இனமென்னும் ஏமப் புணையைச் சுடும்.

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்.

இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

மேற்காணும் திருக்குறளின் அறத்துப்பாலில் அமைந்துள்ள 31 – வது அதிகாரம் வெகுளாமை (கோபம் கொள்ளாமை) ஆகும். சினம் தம்மைக் காக்கும் தன்மையையும், சினமே தம்மைக் கொல்லும் கொள்ளியாகும் என்பதையும் வள்ளுவர் இதில் விளக்குகிறார். கோபத்தை அடக்கி, தம்மைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பதே இவ்வதிகாரத்தின் முக்கிய கருத்தாகும். வெகுளாமை அதிகாரத்தின் குறள்கள் மற்றும் கருத்துக்கள் வாயிலாக சினத்தின் கேடுகளை நமக்கு தெளிந்த நீரோடை போல அய்யன் திருவள்ளுவர் நமக்கு சுட்டிக் காட்டுகிறார்.

எனவே கண்ணாடி மனதை கொண்ட கண்ணதாசன் அவர்களின் பாடல் வரிகளைப் போல ஆசை, கோபம், களவு செய்து பேசத் தெரிந்த மிருகமாக இல்லாமல், அன்பு, நன்றி, கருணையோடு மனித வடிவில் தெய்வமாக இருப்போம். நமது அவ்வைப் பாட்டி ஆத்திச்சூடியில் கூறிய ஆறுவது சினம் என்பதை வாழ்வில் நடைமுறைப்படுத்துவோம். இந்த சமூகத்தை மேம்படுத்துவோம். நமது இந்திய திருநாட்டை வளப்படுத்துவோம்.

(சிந்தனை தொடரும்)..



**பெ. மணிமாறன்**
சமூகப்பற்றாளன்
ஞானச்சித்தன்,
ஆம்பூர் போக்குவரத்து
காவல் ஆய்வாளர்,
திருப்பத்தூர் மாவட்டம்.

---



கஞ்சா கடத்தி வந்த நபரை மடக்கிப் பிடித்த புது வண்ணாரப்பேட்டை காவல் நிலைய காவலர் ஜெஸ்டின் திரவியத்தை, **Greater Chennai Police** சார்பில் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் வெகுமதி வழங்கி பாராட்டினார்.

# சீருடை பணியாளர் தேர்வில் சந்தேகமா???
# உடற்தகுதி தேர்வில் நடக்கும் உள்குத்து!!
# தீர்வு காண்பது யார்???



**தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையம் நடத்திய உடல் தகுதி தேர்வில் சந்தேகம்? நேர்மையற்றமுறையில் நட்த்தப்பட்டதாக பலர் குற்றச்சாட்டு.**

தமிழ்நாடு முழுவதும் கடந்த ஆண்டு நவம்பர் 9 ஆம் தெதி நடைபெற்ற முதல் கட்ட எழுத்துத் தேர்வில் வெற்றி பெற்ற ஆயிரக்கணக்கானோர் அடுத்த கட்டமாக உடல் தகுதி பரிசோதனைக்கு அழைக்கப்பட்டனர். 2026 ஜனவரி 22 முதல் பிப்ரவரி 2 வரை பல கட்டங்களாக தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றது. இது காவல்துறையில் சேரும் ஒரு இளைஞனின் வாழ்க்கையில் மிக முக்கியமான தருணம். ஆனால் இந்த கட்டத்தில் ஏற்பட்ட சில செயல்முறைகள், தேர்வு முறையின் நியாயத்தன்மை குறித்து தீவிர சந்தேகங்களை உருவாக்கியுள்ளன.

இந்த உடற்திறன் பரிசோதனையின் முக்கிய அம்சங்களில் ஒன்று உயர அளவீடு. அறிவிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச உயரத்திலிருந்து ஒரு செ.மீ. குறைவாகவோ, சில மில்லிமீட்டர் குறைவாகவோ இருந்தாலே பலர் தகுதி இழந்ததாக அறிவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. சில மில்லிமீட்டர் குறைவு என்பதே காரணம் என கூறப்பட்டு பலர் வெளியேற்றப்பட்டதாக வேதனையுடன் பகிர்ந்துள்ளனர்.

கடந்த ஆண்டு இதே தேர்வில் உயரத் தகுதியுடன் அனுமதிக்கப்பட்ட சிலர், இம்முறை தகுதி இல்லை என நிராகரிக்கப்பட்டுள்ளனர். இங்கே எழும் முதல் கேள்வி மனிதர்களின் உயரம் ஒரு ஆண்டுக்குள் குறைந்து விடுமா? கடந்த முயற்சியில் சரியான உயரம் இருந்தவர்கள், இப்போது திடீரென

குறைந்துவிட்டார்களா? அல்லது அளவீட்டு முறைகளில் ஏதாவது மாற்றமா? இந்த முரண்பாடுகள் தேர்வாளர்களின் மனதில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்துகின்றன.

மேலும் கவலைக்கிடமான விஷயம், உயரம் தொடர்பான மறுபரிசீலனைக்கு முதல் கட்டம், இரண்டாம் கட்டம் என்று கடைசியாக ரூ.15,000 கட்டணம் வரை செலுத்த வேண்டிய சூழ்நிலை இருப்பதாக தெரிகிறது. ஒரு சாதாரண கிராமத்து இளைஞன் அல்லது இளம்பெண், ஏற்கனவே தேர்வுக்காக பல ஆயிரம் ரூபாய் செலவழித்து, தங்கும் வசதி, பயணம், உணவு ஆகியவற்றிற்காக போராடிய பின், மறுஅளவீடு செய்ய மேலும் பெரிய தொகை செலுத்த வேண்டிய சூழ்நிலை நீதியானதா? அதோடு, காலை 6 மணிக்கே தேற்வுமையத்திற்கு வரும் இளைஞர்கள், மறுஅளவீட்டுக்காக மாலை வரை காத்திருக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. தேர்வு மையங்கள் சில குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே அமைக்கப்பட்டதால், தொலைதூர கிராமங்களில் இருந்து வருவோர் அதிகாலை 3 அல்லது 4 மணிக்கே வீட்டை விட்டு கிளம்ப வேண்டிய கட்டாயம். பெண்களுக்கு இது இன்னும் சவாலானது. பாதுகாப்பு, உடல்நிலை, பயண வசதி ஆகியவை அனைத்தும் சேர்ந்து ஒரு பெரும் மன அழுத்தத்தை உருவாக்குகின்றன.

எழுத்துத் தேர்வுக்காக மாதக்கணக்கில் உழைத்து, தேர்ச்சி பெற்று கனவுகளை கட்டியெழுப்பிய இளைஞர்கள், ஒரு மில்லிமீட்டர் குறைவால் நிராகரிக்கப்படும்போது, அது வெறும் அளவீட்டு விஷயம் அல்ல; அது ஒரு வாழ்க்கை இலட்சியத்தின் முறிவாக மாறுகிறது. அளவீட்டு கருவிகள் மிக துல்லியமாக இருந்தால் மறு அளவீட்டில் அவசியம் ஏன், விண்ணப்பிக்கும் முன்பே ஏன் அருகிலுள்ள அரசு மருத்துவமனையில் இருந்து உயரச் சான்றிதழ் கட்டாயமாக கோரப்படவில்லை? அப்படியான ஒரு நடைமுறை இருந்திருந்தால், தகுதி இல்லாதவர்கள் தொடக்கத்திலேயே விண்ணப்பிக்காமல் இருந்திருப்பார்கள். அவர்களது நேரமும், பணமும், மன ஆற்றலும் வீணாகாமல் இருந்திருக்கும்.

ஒரு மில்லிமீட்டர் வேறுபாடு உண்மையிலேயே காவல்துறையின் செயல்திறனில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துமா? காவலராக பணியாற்றும் திறமை என்பது உயரத்தில் மட்டும் அளக்கப்படுமா? மனவலிமை, ஒழுக்கம், உடற்திறன், சமூக பொறுப்பு உணர்வு ஆகியவை சமமாக கருதப்பட வேண்டிய அம்சங்கள் அல்லவா?

இந்த சம்பவம் ஒரு பெரிய கேள்வியை எழுப்புகிறது: தேர்வு முறைகள் கடுமையாக இருக்கலாம்; ஆனால் அவை நியாயமாகவும், ஒரே மாதிரியாகவும் இருக்க வேண்டாமா? கடந்த ஆண்டு தகுதியானவர், இம்முறை தகுதியற்றவர் என அறிவிக்கப்படும்போது, அது ஒரே தரநிலையா? காவல்துறை என்பது மக்கள் நம்பிக்கையின் அடையாளம். அந்த துறைக்குள் நுழையும் வாயிலே சந்தேகத்திற்குரியதாக மாறினால், பொதுமக்கள் எப்படி முழுமையான நம்பிக்கையை கொள்ள முடியும்? இளைஞர்களின் கனவுகளை மதிக்கும், தெளிவான மற்றும் முன்னெச்சரிக்கை கொண்ட தேர்வு நடைமுறைகள் அவசியமாகின்றன.

ஒரு மில்லிமீட்டர் வேறுபாடு ஒரு மனிதனின் கனவுகளை முடிவுக்கு கொண்டு செல்லக்கூடாது. மாறாக, திறமைக்கு நியாயமான வாய்ப்பு அளிக்கும் முறையே ஒரு நல்ல நிர்வாகத்தின் அடையாளமாக இருக்கும். காவலர் (**Police Constable**) உடற்திறன் பரிசோதனையின் நேர்மை மற்றும் வெளிப்படை தன்மை தொடர்பாக இளைஞர்களின் மத்தியில் பல கேள்விகளை எழுப்பியுள்ள நிலையில், கண்டுகொள்ளுமா தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையம். இது எதிர்காலத்தில் தொடராமல் இருக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? கண்டுகொள்வார்களா அதிகாரிகள் ?

---

## மருத்துவமனையில் நோயாளிகள் தவிப்பு!நடவடிக்கை எடுப்பாரா டீன் பூவாத்தி?






தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்ள சி.டி. மற்றும் எம்ஆர்ஐ ஸ்கேன் மற்றும் இரத்த சுத்திகரிப்பு எடுக்கும் மையத்தில், பல மணி நேரமாக நூற்றுக் கணக்கான நோயாளிகள் வரிசையில் காத்திருந்து தவிக்கின்றனர். ஸ்கேன் மையத்தில் உள்ள டோக்கன் எண் அறிவிப்பு பலகை கூட வேலை செய்யவில்லை. மருத்துவ பணியாளர்கள் அலட்சியத்தால் தாமதம் ஏற்படுவதாக நோயாளிகள் கண்ணீர் மல்க புகார். மக்கள் பயன்படுத்தும் கழிவரையும் சுகாதரமற்று கிடைக்கிறது நடவடிக்கை எடுக்குமா நிர்வாகம்?

# திருச்சி லஞ்ச ஒழிப்பு துறை அதிரடி இலவச மின்சாரம் வழங்க ரூ.3000 லஞ்சம் வாங்கிய பொறியாளர் கைது



**திருச்சி அருகே இலவச மின்சா ரம் வழங்க ரூ.3,000 லஞ்சம் வாங்கிய இளமின் பொறி யாளரை லஞ்ச ஒழிப்பு போலீசார் கைது செய்தனர்.**

திருச்சி மாவட்டம் துறையூர் அடுத்த கோம் பையை சேர்ந்தவர் முத்து. விவசாயியான இவர், விவ சாய நிலத்திற்கு இலவச மின் இணைப்பு வேண்டி தாட்கோ மூலம் விண் ணப்பித்து இருந்தார். தொடர்ந்து, நிதி தாட்கோமூலம் ஒதுக்கீடு செய்யப் பட்டு இருந்தன. இந்த நிலையில், மின் இணைப்பு வழங்க தாம் தம் ஏற்பட்டது. இதையடுத்து, கடந்த 27ம் தேதி செங்காட்டுபட்டி மின்வாரிய இள மின் பொறியா ளர் அலுவலகம் சென்ற முத்து. அங்கு இருந்த இளமின் பொறியாளர் ராஜ்(40) என்ப வரை சந்தித்தபோது அவர் ரூ.3000 லஞ்சம் கேட்டுள்ளார்.இது தொடர்பாக முத்து. திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் புகார் கொடுத்தார்.

லஞ்ச ஒழிப்பு போலீசார் ஆலோசனை பேரில் ரசாயனம் தடவிய ரூ.3,000த்து டன் திருச்சி மாவட் டம் துறையூர் (110 கி.வோ) துணைமின் நிலைய அலுவலகத்திற்கு முத்து சென்றார். அப் போது அங்கிருந்த இளமின் பொறியாளர் ராஜ்வி டம் பணத்தை கொடுத்துள்ளார். அப்போது அங்கு மறைந்திருந்த டிஎஸ்பி மணிகண்டன் தலைமை யிலான இன்ஸ்பெக்டர் சக்திவேல் மற்றும் போலீ சார், ராஜ்வை கையும் களவுமாக மடக்கி பிடித்து கைது செய்தனர்.இதுதொடர்பாக அவரிடம் தொடர்ந்து விசாரணை

---

# 18 வழக்குகளில் தொடர்புடைய பிரபல செல்போன் திருடன்கைது



18 வழக்குகளில் தொடர்புடைய பிரபல செல்போன் திருடனை தாம்பரம் பேருந்து நிலையத்தில் வைத்து தாம்பரம் போலீசார் கைது செய்தனர்.பேருந்து நிலையங்களில் இரவு நேரங்களில் தூங்கும் நபர்களிடமிருந்து செல்போன்களை திருடி வந்த நிலையில் தாம்பரம் உதவி ஆணையாளர் நெல்சன் உத்தரவின் பெயரில் தாம்பரம் காவல் ஆய்வாளர் செல்லதுரை தலைமையில் போலீசார் இரவு நேரங்களில் தாம்பரம் பேருந்து நிலையத்தில் மப்டியில் கண்காணித்த போது இளைஞர் ஒருவர் தூங்கிக் கொண்டிருந்த ஒருவரிடம் இருந்து செல்போனை திருடிய போது கைது செய்தனர்



# கோவையில் நடைபெற்ற அதிரடி சோதனை: 4.5 கிலோ போதைப்பொருள் பறிமுதல்!

கோவை மாவட்டம் செட்டிபாளையம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் மாவட்ட போலீசார் நடத்திய திடீர் சோதனையில் கஞ்சா, போதை மாத்திரைகள், போதை வஸ்த்துக்கள், செல்போன்கள், ஆவணங்கள் இல்லாத வாகனங்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டு 5 பேர் கைது செய்யப்பட்டனர்.காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த நிலையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன் அவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து அவர் கூறுகையில் 22 ஆவணங்கள் இல்லாத வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக தெரிவித்தார். மேலும் 4.5 கிலோ கஞ்சா, 50 மில்லி கிராம் கஞ்சா ஆயில், சிந்தடிக் ட்ரக்ஸ், மெத்தபெட்டமைன், கஞ்சா சாக்லேட் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் 18 பேரிடம் சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணை நடத்தி வருகிறோம். ஐந்து குற்றவாளிகளில் இரண்டு பேர் மீது ஏற்கனவே வழக்குகள் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

---







# தமிழ்நாடு தலை குனியாது.......




**சி.சுபாஷ் சந்திர போஸ்**
(காவல்துணை கண்காணிப்பாளர் ஓய்வு)


தொண்மையான தமிழுக்குள் தோன்றிய தமிழ்நாடு
தொட்டில்கட்டி தாலாட்டும் தாய்மையின் பண்பாடு
வாழ்க்கை வசதிகளை உழைப்பாக்கிய திருநாடு
வந்தாரை வாழவைக்கும் வஞ்சிக்காத நம்நாடு

விவசாயம் விளைந்திருக்கும் விளைநிலங்கள் நாடெங்கும்
வித்தகர்களாய் உழவர்கள் நிறைந்திருக்கும் வீடெங்கும்
உழைத்து வாழ்வதிலே உயிரோடு உடம்பிற்கும்
உண்மையாய் வாழ்வதற்கு மானத்தை நம்பியிருக்கும்

பயிர்களை விளைய வைத்து பஞ்சங்களை போக்கும்
பாடுபடும் உழவர்களுக்கு வியர்வையை காட்டும்
தன்மானம் நிறைந்த தமிழர்களின் பண்பாடு
தன்னிலை மறந்து தலைகுனியாது தமிழ்நாடு




வாகன விபத்தில் உயிரிழந்த சென்னை பெருநகர காவல் ஆயுதப்படை மோட்டார் வாகனப் பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளர் S.ராஜுவின் குடும்பத்தினருக்கு, ரூ.1 கோடி விபத்து காப்பீடு காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், இ.கா.ப., அவர்கள் வழங்கினார்.

---




தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் காணொலிகாட்சி வாயிலாக இந்திய தேர்தல் ஆணையம் சார்பில் (28.02.2026) நடைபெற்ற தகவல் மற்றும் தொலைத்தொடர்பு இணையவழி பயிற்சி குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம் இ.ஆ.ப அவர்கள் தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் தேர்தல் தொடர்புடைய அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார்கள்.



# ஜனநாயக அனைத்து பத்திரிகை உறவுகள் பாதுகாப்பு நல சங்கத்தின் 5ம் ஆண்டு துவக்க விழா, ஆதரவற்ற முதியோர்களுக்கு உணவு மற்றும் உடை வழங்கும் நிகழ்வு சென்னையில் நடைபெற்றது.

**ஜனநாயக அனைத்து பத்திரிகை உறவுகள் பாதுகாப்பு நல சங்கத்தின் 5ம் ஆண்டு துவக்க விழா, மற்றும் ஆதரவற்ற முதியோர்களுக்கு உணவு மற்றும் வேஷ்டி சேலை வழங்கும் நிகழ்வு, சிறந்த பத்திரிகை மற்றும் பத்திரிகையாளர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு, 22.02.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று சென்னை, வேலப்பன்சாவடி அக்ஷயா ட்ரஸ்டில், சங்கத்தின் மாநிலத் தலைவர் த.மு.தருமராஜாD, Astro அவர்கள் தலைமையில் நடைபெற்றது,**

மாநிலப் பொதுச்செயலாளர், வெற்றி சரித்திரம் இதழ் ஆசிரியர் பி.பாஸ்கர்BBA, வரவேற்புரையாற்றினார், மாநிலப் பொருளாளர், மக்கள் துணைவன் இதழ் ஆசிரியர் டாக்டர் ஏ.கே.முத்துக்குமார் ஃஷிம்,மாநிலத் துணைத் தலைவர், நீதியின் பாதை இதழ் ஆசிரியர் டாக்டர் வே.ரஞ்சன் முன்னிலை வகுத்தனர்,

சிறப்பு விருந்தினர்களாக, சிகப்பு நாடா இதழ் ஆசிரியரும், ஜனநாயக அனைத்து பத்திரிகை உறவுகள் பாதுகாப்பு நலச் சங்கத்தின் கௌரவத் தலைவர், பி.ஆர்.பிரதாப் சந்தர் யயபு, அவர்களும், சென்னை, பள்ளிக்கரணை போக்குவரத்து காவல் உதவி ஆணையர் பு.சுந்தர்ராஜ் னி,றீஉ அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி முதியோர்களுக்கு உணவு மற்றும் உடை வழங்கியும், பத்திரிகையாளர்களுக்கு விருதுகள் வழங்கியும் கௌரவித்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக**

நீதியின் நுண்ணறிவு இதழ் ஆசிரியர் **ரா.சிவக்குமார்,** மனசொலி, மக்கள் உறவு இதழ் ஆசிரியர், தமிழ்நாடு சிறு பத்திரிகையாளர்கள் சங்க தலைவர் கா.குரு அவர்கள், ஏ.எம்.அய்யாதுரை MABLஅரசு வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்றம்,த.குமரன் னிபுயஸி, வழக்கறிஞர், க.கவியரசன் BCOM,LLB, வழக்கறிஞர், எம்ஜிஆர் மக்கள் கட்சி தலைவர் வழக்கறிஞர் விஸ்வநாதன், தமிழ்நாடு ஏழை எளியோர் நடுத்தர மக்கள் நலச் சங்கத் தலைவர் வி.எஸ்.லிங்க பெருமாள், சென்னை விநியோகஸ்தர்கள் சங்க தலைவர் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை நிர்வாகி டாக்டர் கே.நடராஜன், கடல் துளிகள் இதழ் ஆசிரியர், வின் பத்திரிகையாளர் சங்க துணைத் தலைவர் வி.யுவராஜ், அகில இந்திய பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடக நலச் சங்கம் வழக்கறிஞர் பிரிவு தலைவர் வழக்கறிஞர்

டி.சீனிவாசன், உதயநிலா இதழ் ஆசிரியர் எஸ்.கிரிக்குமார், லஞ்ச ஒழிப்புத்துறை காவல் உதவி ஆய்வாளர் டாக்டர் எஸ்.ஹரிபாபு பிஎச்டி, அரசியல் முத்திரை இதழ் ஆசிரியர் ஜெ.செல்வம், மக்கள் சிந்தனை ஆசிரியரும்,அகில இந்திய பத்திரிகையாளர் மற்றும் ஊடகவியலாளர் சங்க மாநில தலைவர் எம்.அன்பரசன், அதிரடி குரல் இதழ் ஆசிரியர் V.N.ஜெயகாந்த் B.Sc, MBA, நான்கு திசை மலர் இதழ் ஆசிரியர் ஏ.லட்சாபதி என்கிற லட்சியவேந்தன், ஆரம்பம் இதழ் ஆசிரியர் ராமச்சந்திரன், தேனை பார்வை இதழ் ஆசிரியர் என்சரண்குமார், சீர்மிகு காவலர்கள் இதழ் ஆசிரியர் டி.ஜெயக்குமார், ரிபப்ளிக் டுடே தமிழ் ஆசிரியர் நெல்சன் சைமன், மக்களின் முதல்வன் இதழ் ஆசிரியர் பி.ராஜேஷ், ரிப்போர்டர் ப்ளாஸ் இதழ் ஆசிரியர் பாலாஜி, ஒன் கே மீடியா ஆசிரியர் டி அரசு, உள்ளாட்சி செய்தி உதவியாசிரியர் கோடீஸ்வரன், மக்கள் துணைவன் உதவி ஆசிரியரும், ஜனநாயக அனைத்து பத்திரிக்கை உறவுகள் பாதுகாப்பு நல சங்கத்தின் மாநில துணைப் பொதுச் செயலாளர் Dr.P.சத்திய நாராயணன் Hd,நீதியின் பாதை இதழ் பொறுப்பாசிரியர் வி.சுப்பிரமணி, இணை ஆசிரியர் வி.ராஜ்,உதவி ஆசிரியர் ஜே.பெஞ்சமின் ஜோசப், புகைப்படக் கலைஞர் கே.பி.ரவிச்சந்திரன்,



தலைமை நிருபர் ஒய்.நரேஷ் குமார், உதவிக்கரம் இதழ் உதவி ஆசிரியரும், ஜனநாயக அனைத்து பத்திரிகை உறவுகள் பாதுகாப்பு நல சங்கத்தின் செயற்குழு உறுப்பினருமான எம்.பி.நந்தகுமார் யபு, தேனை பார்வை இதழ் உதவியாசிரியர் என்.சதீஷ், சீர்மிகு காவலர்கள் இதழ் நிர்வாக ஆசிரியர் சரத், மக்கள் விருப்பம் இதழின் தலைமை நிருபரும், ஜனநாயக அனைத்து பத்திரிகை உறவுகள் பாதுகாப்பு நலச் சங்கத்தின் மாநில செயற்குழு உறுப்பினர் எஸ்.வி.கோபிநாத் **BA**,புகைப்பட கலைஞரும்,மாநில செயற்குழு உறுப்பினர் கு.சுரேஸ், ஆலந்தூர் தொகுதி நிருபரும், ஜனநாயக அனைத்து பத்திரிகை உறவுகள் பாதுகாப்பு நலச்சங்கம் தென் சென்னை மாவட்ட பொருளாளர் கே.பாஸ்கர், நிருபர் பி.குணசேகர், வேளச்சேரி தொகுதி நிருபரும், தென் சென்னை மாவட்ட துணைச் செயலாளர் நா.யோகநாதன், பல்லாவரம் தொகுதி நிருபரும், செங்கல்பட்டு மாவட்ட தலைவர் பி.சுரேஷ் சர்மா, உதவிக்கரம் இதழ் நிருபர் டென்னிசன், உதவிக்கரம் இதழ் நிருபரும், ஜனநாயக அனைத்து பத்திரிகை உறவுகள் பாதுகாப்பு நல சங்கத்தின் காஞ்சிபுரம் மாவட்ட



செயலாளர் ஜே.தீபக்குமார் குப்தா,மக்கள் துணைவன் இதழ் நிருபர் முகமது ரபிக், தேனை பார்வை இதழ் நிருபர் ஞானராஜ், மக்கள் சிந்தனை நிருபர் முத்து உள்ளிட்ட ஏராளமான பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டனர்.

---

# கஞ்சா கடத்தி வந்த ஐந்து நபர்கள் கைது, 10 கிலோ கஞ்சா பறிமுதல்

தென்காசி மாவட்டத்தில் கஞ்சா மற்றும் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் ஆகியவற்றின் புழக்கத்தை முற்றிலும் தடுக்கும் விதமாக தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. **G.S.** மாதவன் **T.P.S.**, அவர்களின் உத்தரவின் பேரில் தனிப்படைகள் அமைக்கப்பட்டு தீவிர கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தென்காசி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பண்பொழியில் இருந்து தென்காசி செல்லும் சாலையில் கஞ்சா கடத்துவதாக காவல்துறைக்கு கிடைக்க ரகசிய தகவலின் பேரில் தென்காசி காவல் ஆய்வாளர் திரு. ராபர்ட் ஜெய்ன் அவர்கள் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு. சத்ய வேந்தன் ஆகியோர் தலைமையிலான காவல்துறையினர் துரிதமாக செயல்பட்டு தென்காசி குத்துக்கல்வலசையில் வைத்து மேற்படி கஞ்சா கடத்தி வந்த நெட்டூர் பகுதியை சேர்ந்த இசக்கி குமார் (வயது 31), பேச்சு முத்து (வயது 32), அம்பாசமுத்திரம் பகுதியை சேர்ந்த நைனார் விக்னேஷ் (வயது 32), ராஜாராம் @



கோபி (வயது 26) மற்றும் அய்யனார்குளம் பகுதியை சேர்ந்த மனோ ரஞ்சித் (வயது 21) ஆகிய ஐந்து நபர்களை சுற்றி வளைத்து அதிரடியாக கைது செய்தனர், மேலும் அவர்களிடமிருந்து 10 கிலோ கஞ்சா, பைக், கார் மற்றும் லாரி ஆகிய வாகனங்களும், மேற்படி நபர்கள் பயன்படுத்திய செல்போன்களும் பறிமுதல் செய்யப்பட்டு விசாரணை செய்து பின்பு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.



## விளிம்பு நிலை மக்களின் விடிவெள்ளி

# தோழர் ஆறு நீலகண்டன்

### –எழுதிய நூல்கள் வெளியீட்டு விழா

**நாட்டாணிக்கோட்டை கிராமத்தில் வணிகராக வலம் வந்த ஐயா ஆறுமுகம், சாரதா அம்மாள் இணையரின் இளைய மகனாகப் பிறந்தவர்.**

வறுமையற்ற இளமை இவரின் சிந்தனையை சிதைக்கவில்லை.மாறாக கொடுத்து வாழும் பண்பை வளர்த்தது. இரந்து வாழும் சமூகம் குறித்த சிந்தனை இவரை முற்போக்காளராக மாற்றியது.

வர்க்கப் ரீதியாக தந்தையின் வணிகம் இவருக்கு வளமையை உருவாக்கி எல்லோரிடமுமான நட்பை ஏற்படுத்தி இருந்தாலும் சக உறவுகள் பெற முடியாத சமூக அங்கீகாரம் குறித்தும் சாதியை ஏற்றத்தாழ்வுகள் குறித்துமான சிந்தனையை இவரிடம் உருவாக்கியது.

வர்க்கப் ரீதியான வளம் வருணாசிரம நிலையில் எந்த மாற்றத்தையும் தரவில்லை என்பதை தொடக்கத்திலேயே தெரிந்து கொண்டார்.

படிப்பும் உழைப்பும் இவரின் அண்ணனை பன்னாட்டு நிறுவனத்தில் பணியில் அமர்த்தி அழகு பார்த்தாலும் இந்து மதம் உருவாக்கி வைத்த வருணாசிரம கோட்பாடுகள் சக உறவுகளை பண்ணைகளின் வீட்டு வாசலில் நிற்க வைத்ததை நினைத்து நிதானம் இழக்காமல் சிந்திக்கத் தொடங்கினார்.

பேராவூரணியைச் சுற்றிலும் ஆயிரக்கணக்கான நீலகண்டன்கள் நிறைந்திருந்தாலும், நீலு தோழர் என்றால் நிதானம் தவறாமல் எல்லோரும் அடையாளம் காட்டி விடுவார்கள் இவரை.இன்று பேராவூரணியின் அடையாளமாக மாறி நிற்கிறார் தோழர் நீலகண்டன்.

நம்பிக்கை இழந்தவர்களின் கடைசி நம்பிக்கையாக, குரலற்றவர்களின் சிம்மக் குரலாக உயர்ந்து நிற்கிறார்.

ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்தில் நில உடைமைச் சமூகத்தின் அடிமை மனிதர்களாக ஒடுக்கப்பட்ட மக்கள் நடத்தப்பட்ட பொழுது ஐயா அரங்க குணசேகரனின் அரிமா குரல் ஒட்டுமொத்த ஒடுக்கப்பட்ட மக்களுக்குமான அடிமை விலங்கை தகர்த்தெறிந்தது.

ஆண்டைகள் அச்சப்பட்டனர். சாதி சொல்லி அழைப்பது கூட அவர் காதுக்கு எட்டி விடக்கூடாது என்பதில் கவனத்தோடு இருந்தனர்.




சாணிப் பால் சவுக்கடிக்கு சாவு மணி அடித்த சிவப்பு மனிதர்களின் அடுத்த தலைமுறை தான், ஐயா அரங்க குணசேகரன்.

ஒட்டுமொத்த சமூகத்தின் முன்னேற்றத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் உழைப்பு தவிர்க்க முடியாததாக அனைவரும் உணரத் தொடங்கினர். உழைப்பு சமூகங்கள் ஒன்றுபட வேண்டிய கட்டாயத்தை விளிம்பு நிலை மக்களின் பிரதிநிதிகள் உருவாக்கி வந்தனர்.

மனதில் கலந்து நிற்கும் சாதிய வன்மத்தை முகத்தில் காட்ட முடியாமல் பண்ணையார்கள் பதறிய பொழுது, ஆளும் அரசுகளின் சட்டபூர்வமான பேச்சு வார்த்தைகள் ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவர்களை நாற்காலியில் அமர வைத்தது.

வர்க்கப் போராட்டமும் வருணாசிரம போராட்டமும் சிவப்பும் நீலமும் கலந்த காலகட்டத்தில் ஐயா அரங்க குணசேகரனோடு கைகோர்த்துக் கொண்டார் தோழர் நீலகண்டன்.

தோழர் அரங்க குணசேகரன் தலைமையிலான தமிழக மக்கள் புரட்சிக் கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளராக தொடர்ந்து செயலாற்றி வருகிறார் தோழர் ஆறு. நீலகண்டன்.

விளிம்பு நிலை மக்களின் வாழ்வாதார உரிமைகள் இவர் வாயிலிருந்து எழும் பொழுது ஏகபோக அதிகாரம் அதிர்ந்தது.

தோழர் நீலகண்டன் பேசத் தொடங்கிய போது நில



உடைமையின் நியாயம் எல்லோரின் காதுகளிலும் கேட்கத் தொடங்கியது. கோவில் நுழைவுப் போராட்டங்கள் இவருக்கு சிறைச்சாலை வாசல்களை திறந்து வைத்தது.

நில மீட்புப் போராட்டங்கள் நில ஆக்கிரமிப்பு மனிதர்களின் வன்மத்தை தூண்டிவிட்டது. அவர்களின் செயல்கள் சமூகத்தில் அம்பலப்பட்டது.

கேட்க நாதியற்றவர்களாய் கிடந்த மக்களை தட்டி எழுப்பியது இவரின் சொற்கள். 'நாமும் மனிதர்கள்' என்று அனைவரையும் முழங்க வைத்தது.

ஒடுக்கப்பட்ட மக்கள் ஒரு ஜாதியில் மட்டுமல்ல ஒவ்வொரு ஜாதிக்குள்ளும் உழைக்கும் மக்கள் ஒடுக்கப்பட்டு கொண்டே இருக்கிறார்கள் என்பதை அனைத்து தரப்பு மக்களிடமும் பரப்புரை செய்து வருகிறது இவரின் முழக்கங்கள்.

சாதிப் பெருமிதங்கள் நிகழ்த்தும் சமூக ஒடுக்கு முறையையும், பறிக்கும் வாழ்வாதார உரிமைகளையும் தெருமுனை கூட்டங்கள் மூலம்




சாமானியரையும் சிந்திக்க வைக்கிறார்.

அனைவருக்குமான தரமான சமமான கல்வி வாய்ப்புகள் மற்றும் வாழ்வாதார உரிமைகள் கிடைத்திட தொடர்ந்து போராடி வருகிறார்.

ஏழை எளிய மனிதர்களிடம் இருக்கும் உயர்சாதி ஏற்றத்தாழ்வு சிந்தனைகள் எப்படி அவர்களின் உரிமைகளை, உழைப்பை, வளத்தை பறிக்கிறது என்பதை எளிமையாக எடுத்துரைத்து வருகிறார்.

அரச பயங்கரவாதம் நிகழ்த்தும் உழைப்பு சுரண்டலையும் படுகொலைகளையும் பட்டியலிட்டு முதலாளித்துவ ஜனநாயகத்தின் முகத்திரையை கிழித்து வருகிறார்.

சமதர்ம சமூகம் அமைந்திட தொடர்ந்து பேசுவதும் எழுதுவதும் மட்டுமல்லாமல் தெருவில் நின்று போராடியும் வருகிறார்.

ஈழப் போராட்டம், கூடங்குளம் அணுமின் திட்டத்திற்கு எதிரான போராட்டம், நெடுவாசல் மீத்தேன் திட்டத்திற்கு எதிரான போராட்டம், தொழிலாளர் நலன் சார்ந்த, ஒட்டுமொத்த மக்களின் கல்வி வேலை வாய்ப்பு உரிமை சார்ந்த



நோக்கங்களுக்கான போராட்டங்கள் என சாதி மத பேதமற்ற சமூக சிக்கல்களை பொதுமக்களிடம் அம்பலப்படுத்தி அனைவரையும் ஒன்று திரட்டி வருகிறார்.

நீலகண்டபுரம் மக்களின் பாதை மீட்பு போராட்டம், பள்ளி மாணவிகள் செல்லும் பாதையில் அமைந்திருந்த மதுக்கடைகளை அப்புறப்படுத்தும் போராட்டம் போன்றவை மக்கள் பேராதரவோடு வெற்றியைப் பெற்றுத் தந்தது. வடிவம் மாறிய சாதிய வன்மமும் பேச்சுவார்த்தைகளும் போராட்டங்களும் ஒவ்வொரு நாளும் இவர் வாழ்வோடு பின்னி பிணைந்து நிற்கிறது.

மதவாத சாதிய அமைப்புகள் இவரின் எழுத்துக்களுக்கும் பேச்சுக்களுக்கும் அஞ்சி நிற்கலாம் பேரழிவுக்கு எதிராக திரள வேண்டிய பொதுமக்களின் அச்சத்தை போக்கி இருக்கிறது இவரது எழுத்துக்களும் பேச்சுக்களும்.

திருக்குறள் பேரவை என்னும் முற்போக்கு இலக்கிய வட்டம் இங்கு தொடர காரணமாக இருப்பவர். அந்த அமைப்பு மூலம் வள்ளுவரின் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற உன்னத தத்துவத்தை எல்லோரும் உணர்ந்து கொள்ள செயலாற்றி வருபவர்.

அந்த சிந்தனையின் விளைவு தான் தோழர் ஆறு நீலகண்டன் எழுதிய இரண்டு நூல்கள்...




### வேளாண்மை ஒரு வாழ்வியல் கடவுள்

கடந்த பிப்ரவரி 28ஆம் தேதி பேராவூரணியில் தமிழக மக்கள் புரட்சி கழகத்தின் மாநில கொள்கை பரப்பு செயலாளர் தோழர் ஆறு. நீலகண்டன் எழுதிய வேளாண்மை ஒரு வாழ்வியல் மற்றும் கடவுள் என்ற இரண்டு நூலினை தமிழக மக்கள் புரட்சி கழகத்தின் தலைவர் தோழர் அரங்க குணசேகரன் தலைமையில் வெளியிட்டு விழா சிறப்பாக நடைபெற்றது இந்த நூலினை பாரத் கல்வி குழுமத்தின் தலைவர் திருமதி புனிதா கணேசன் மற்றும் தீண்டாமை ஒழிப்பு முன்னயின்பொறுப்பாளர் ஆர் கலைச்செல்வியும் வெளியிட்டார்கள்.M.L.A.அசோக்மார், முன்னாள் M.L.A.சிங்காரம், மற்றும் வட்டாச்சியர் சுகுமார், அனைவரும் விழாவினில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

---



## மீண்டும் பள்ளிக்கு செல்லும் 180, குழந்தைகள் குமரி எஸ்பி அசத்தல்

கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு காரணங்களுக்காக பள்ளியை விட்டு வெளியேறிய 180க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு கன்னியாகுமரி மாவட்ட எஸ்பி ஸ்டாலின் ஐபிஎஸ் உருவாக்கிய நிமிர் தி ரைசிங் திட்டத்தின் மூலம் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் மீண்டும் பள்ளிக்கு செல்கின்றனர்

---



# தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட சுமார் ரூ. 13,000 மதிப்பிலான 24 கிலோ புகையிலைப் பொருட்களை பறிமுதல் செய்து, எதிரிகளை கைது செய்த ஆழ்வார்குறிச்சி காவல்துறையினர்

**தென்காசி மாவட்டத்தில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் மற்றும் கஞ்சா ஆகியவற்றின் புழக்கத்தை முற்றிலும் தடுக்கும் விதமாக தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. G.S. மாதவன் T.P.S., அவர்களின் உத்தரவின் பேரில் தனிப்படைகள் அமைக்கப்பட்டு தீவிர கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

ஆழ்வார்குறிச்சி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பாப்பான்குளம் பகுதியில் (19.02.2026 அன்று ) சட்டவிரோதமாக புகையிலை பொருட்கள் பதுக்கி வைத்திருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் காவல்துறையினர் திடீர் சோதனை நடத்தியதில் விற்பனைக்காக புகையிலை பொருட்களை பதுக்கி வைத்திருந்த பெருமாள் என்பவரின் மகன் சுப்புதுரை(38) என்பவரை கைது செய்து பதுக்கி வைத்திருந்த 24.300 கிலோ எடை கொண்ட ரூ.12,960 மதிப்பிலான அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை பறிமுதல் செய்து விசாரணை மேற்கொண்டதில் அவர் செட்டிகுளத்தை சேர்ந்த சரவணன் (45) மற்றும் செல்வக்கனி (30) ஆகியோரிடம் இருந்து வாங்கியது தெரியவந்தது இது தொடர்பாக மேற்படி மூன்று நபர்கள் மீதும் ஆழ்வார்குறிச்சி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர். மேலும் புகையிலை பொருட்கள் எங்கிருந்து வாங்கிவரப்பட்டது குறித்தும் இதில் தொடர்புடையவர்கள் குறித்தும் விசாரித்து வருகின்றனர்.

---



# துரைப்பாக்கம் பகுதியில் ஸ்டீல் பைப்புகளை திருடிய நபர் கைது. சுமார் ரூ.15 ஆயிரம் மதிப்புள்ள 150 கிலோ ஸ்டீல் பைப்புகள் மீட்பு

சென்னை, பெருங்குடி, பழைய மகாபலிபுரம் சாலையில் உள்ள பழைய சுங்கச்சாவடி பகுதியில் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவன அலுவலகம் இயங்கி வருவதாகவும், இங்கு பழைய மகாபலிபுரம் சாலையில் மெட்ரோ இரயில் பணிக்காக அகற்றி அப்புறப்படுத்தும், மின்கம்பங்கள், பேருந்து நிறுத்த ஷெல்டர் ஸ்டீல் பைப்புகள் ஆகியவற்றை வைத்துள்ளதாகவும், நேற் (25.02.2026) அன்று விடியற்காலை, ஒரு நபர் அங்கு வைத்திருந்த ஸ்டில் பைப்புகளை திருடிக் கொண்டு தப்ப முயன்றபோது சத்தம் கேட்டு காவலாளி மடக்கி பிடித்ததாகவும், மேற்படி தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின் டிராபிக் கன்ட்ரோல் சூப்பர்வைசர் தங்கபாலு என்பவர் J-9 துரைப்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவில் பிடிபட்ட நபரை கைப்பற்றிய பொருட்களுடன் ஒப்படைத்து புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் விசாரணை செய்தனர்.

J-9 துரைப்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் விசாரணை செய்ததில், பிடிபட்ட நபர் சந்திரசேகர் என்பதும், சந்திரசேகர் கட்டிங் மெஷின் மூலம் மேற்படி இடத்தில் வைத்திருந்த ஸ்டீல் பைப்புகளை வெட்டி திருடிக் கொண்டு தப்ப முயன்றபோது பிடிபட்டதும் தெரியவந்தது.

அதன்பேரில், J-9 துரைப்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவில் வழக்குப் பதிவு செய்து, எதிரி சந்திரசேகர், வ/34, ஜெகநாதபுரம் மெயின் ரோடு, வேளச்சேரி, சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து சுமார் ரூ.15 ஆயிரம் மதிப்புள்ள 150 கிலோ எடை கொண்ட ஸ்டீல் பைப்புகள் மீட்கப்பட்டு, குற்றச் செயலுக்கு பயன்படுத்திய கட்டிங் மெஷின் பறிமுதல் செய்யப்பட்டது.

# Z System Intelligent Controls Private Limited

system

Intelligence in Automation

We are prominent Industrial automation solution provider having strong knowledge and expertise in handling automation products like PLC, HMI/SCADA, VFD, PID controllers, Field transmitter, Switches, Sensors etc.

We areconversant in handling IOT, VR & AR applications

We offer complete sales, Engineering & Application development and Commissioning support services across India.

## Our Principles & Products

SIEMENS



PLC,HMI,Scada,VFD,IOT Solutions, RFID

azbil



Temperature Controller, Recorders, Switch, Sensors

TURCK



Sensors, Connectivity. Interface technology Analysers

AR, VR, ER Developement




## Our Service



Power



Water &Waste water



Metro



SPM



Cement



Metal



Smart World

## Our Clients

## Contact Address

Plot No.36
27th Street
Thillai Ganga Nagar
Nanganallur
Chennai-600061
Website : www.zsystem.in

Plot No.22,23, [redacted]
Nagar, Tambaram
Chennai-
600045.Tamilnadu, India.
Phone : 098404 53136

/zsystem.in
/zsystem_in
/z-system-intelligent-controls-pvt-ltd

# தமிழகம் முழுவதும் மாவட்ட வாரியாக சைபர் காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டு உள்ளது.




தமிழகத்தில் சைபர் குற்றங்கள் அதிகரித்து வருவதால் அதை கட்டுப்படுத்த தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவு படி தமிழக காவல்துறை பல அதிரடி மாற்றங்களை செய்து வருகிறது. தமிழகம் முழுவதும் மாவட்ட வாரியாக சைபர் காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் தமிழகத்தில் வங்கி மோசடி, இணையதள குற்றங்கள் குறித்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சைபர் க்ரைமில் ஏற்கனவே இயங்கிவரும் 155260 என்ற எண்ணிற்கு மாற்றாக 1930 என்ற புதிய சைபர் கிரைம் உதவி எண் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய எண் மூலம் வங்கி மோசடி குறித்து புகார் அளித்தால் உடனே சைபர் கிரைம் போலீசார் சம்பந்தப்பட்ட வங்கியை தொடர்பு கொண்டு மோசடி நடந்த வங்கி கணக்கை முடக்கி மோசடி நபர்கள் பணம் எடுக்க முடியாதபடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மோசடி நபர்களிடம் இருந்து பொதுமக்களின் பணத்தைப் பாதுகாக்க எண் 1930 மிகவும் உதவியாக உள்ளது.

---



நாங்குநேரி இரட்டைக் கொலை வழக்கில் 7 பேர் கைது நெல்லை மாவட்டம் நாங்குநேரி இரட்டைக் கொலை வழக்கில் 7 பேர் அதிரடி கைது. தீவிர விசாரணை தற்போது நடைபெற்று வரும் நிலையில், இவ்வழக்கில் 14 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளது.


Owned, Published And Printed By **R.SIVAKUMAR** Printed At **CHENNAI OFFSET PRINTERS**, 19/1, 21/2, Kitabathkhan Bhandur Street, Ellis Road, Chennai - 600002. Published From No.14/88, 3rd Main Road, Venkateswara Nagar, Velachery, Chennai - 600042 Editor: **R.SIVAKUMAR**

A Journey of 15 Years Geesys in India

Safe - Save - Sustain

GEESYS®

# GEESYS இருக்க...
# Voltage பயம் எதற்கு?

indian technologies stabilizer

OPERATING RANGE
**170 - 270 VAC**

WARRANTY
**3 YEARS**

EFFICIENCY
**> 98%**







**DESIGNED TO PROTECT YOUR AC**

**SINGLE BOOSTER STABILIZER**

**DOUBLE BOOSTER STABILIZERS**

**Follow us**

**Call Us**
9962012354

**Mail Us**
Info@geesysindia.com

**Learn more**
www.geesysindia.com

**NEETHIYIN NUNNARIVU** - Tamil Monthly  **RNI No. TNTAM/2020/80067**

